சுருக்கம்

சிலைகள் – ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை – கடலூர் மாவட்டம் – விருத்தாச்சலம் வட்டம் – பழைய பட்டினம் கிராமம் – புல எண். 47 – 0.51.0 ஹெக்டேர் பாட்டை புறம்போக்கு நிலம் – சென்னை உயர்நீதிமன்ற வழக்கு எண். 1012/2010–ல் 11.02.2010 அன்று வழங்கப்பட்ட தீர்ப்பு – முனைவர் பீ.ரா.அம்பேத்கார் அவர்களின் முழு உருவச் சிலையை மீளவும் அமைத்தது – பின்னேற்பு வழங்குதல் – ஆணை வெளியிடப்படுகிறது.

---

**ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் (ஊ.2) துறை**

அரசு ஆணை (நிலை) எண்.38 நாள்:03.05.2010

படிக்கப்பட்டவை:

1. அரசு கடித எண்.15611/சி3/94–6, ஊரக வளர்ச்சித் துறை, நாள் 12.06.1995.
2. அரசு ஆணை (நிலை) எண்.248, ஊரக வளர்ச்சித் (சி.2) துறை, நாள் 23.11.1998.
3. கடலூர் மாவட்ட ஆட்சித் தலைவரின் கடித எண். C3/2592/2010, நாள் 01.03.2010.

* * * * *

ஆணை:

கடலூர் மாவட்டம், விருத்தாச்சலம் வட்டம், பழைய பட்டினம் கிராமம், புல எண்.47 – 0.51.0 ஹெக்டேர் பாட்டை புறம்போக்கு நிலத்தில் முனைவர் பீ.ரா.அம்பேத்கார் அவர்களின் முழு உருவச் சிலையினை சென்னை உயர்நீதிமன்ற வழக்கு எண்.1012/10–ன் மேல் 11.02.2010 அன்று வழங்கப்பட்ட தீர்ப்பின்படி மீளவும் நிறுவிட விருத்தாச்சலம் திரு.த.அமிர்தலிங்கம் என்பவர் அனுமதி கோரி மனு செய்துள்ளார்.

2. 23.02.2010 அன்று நடைபெற்ற பழைய பட்டினம் ஊராட்சி மன்ற சிறப்பு கூட்டத்தில் மேற்படி இடத்தில் முனைவர் பீ.ரா.அம்பேத்கார் அவர்களின் சிலை அமைப்பது என தீர்மானம் நிறைவேற்றப்பட்டுள்ளது.

3. மேற்படி இடத்தில் முனைவர் பீ.ரா.அம்பேத்கார் அவர்களின் முழு உருவச் சிலையினை அமைப்பது தொடர்பாக, திரு. கண்ணன் என்பவரின் சார்பாக அரசின் முன் அனுமதியின்றி அமைக்கப்பட்ட முனைவர் பீ.ரா.அம்பேத்கார் அவர்களின் முழு உருவச் சிலையினை முஸ்லீம் சமுதாயத்தினரின் கோரிக்கைக்கு இணங்க, பழையப்பட்டினம் கிராமம் புல எண். 52/1 – 01042 ச.மீ. தெரு புறம்போக்கு நிலத்தில் திரு. கண்ணன் தரப்பினர் மேற்படி சிலையை அப்புறப்படுத்தி வைத்தனர். இந்நிலையில் சிலை மாற்றப்படுவதைத் தடுக்கக் கோரி திரு.அமிர்தலிங்கம் த/பெ. தங்கவேல் என்பவர் சென்னை உயர்நீதிமன்றத்தில் நீதிப்பேராணை எண். 1012/2010 இல் தொடர்ந்திருந்த வழக்கில் 11.02.2010 அன்று வழங்கிய தீர்ப்பில் மேற்படி சிலையினை மீளவும் புல எண்.47–ல் உள்ள பாட்டை புறம்போக்கு நிலத்தில் அமைக்க சென்னை உயர்நீதிமன்றம் ஆணை பிறப்பித்தது. கடலூர் மாவட்ட ஆட்சியர் அவர்களின் நடவடிக்கைகளின்படி

(கு.பி.பா.)

26.02.2010 அன்று உயர்நீதிமன்ற ஆணையின்படி, பழையப்பட்டினம் கிராமம் புல எண்.47 – 0.51.0 ஹெக்டேர் பாட்டை புறம்போக்கு நிலத்தில் தென்கீழ் மூலையில் கிழமேல் பிரதான சாலைக்கும் தெற்கு, கிராம நிர்வாக அலுவலர் அலுவலகத்திற்கும் மேற்கு, நூலக கட்டிடத்திற்கு வடக்கு, காலனி செல்லும் தென்வடல் பாதைக்கும் கிழக்கு, என்ற சக்குபந்தியில் 5 x 4 அடி நீள, அகலத்தில் 5 அடி உயரமுள்ள பீடத்தில் சுமார் 7 அடி உயரமுள்ள முனைவர் பீரா. அம்பேத்கார் அவர்களின் முழு உருவச் சிலை அமைக்கப்பட்டுள்ளது. இச்சிலை போக்குவரத்துக்கோ, பொது உபயோகத்திற்கோ இடையூறாக இல்லை. அருகில் உள்ள சாலையில் இருந்து சுமார் 5 அடி உள்நோக்கி அமைந்துள்ளதால் வாகனங்கள் விபத்தாவதற்கும் வாய்ப்புகள் ஏதுமில்லை என்று வருவாய் வட்டாட்சியர், விருத்தாச்சலம் தெரிவித்துள்ளார்.

4. ஊராட்சி மற்றும் ஊராட்சி ஒன்றியப் பகுதிகளில் நிறுவப்படும் சிலைகள் வெண்கலத்தால் ஆனதாக இருந்தால் மட்டுமே சிலை நிறுவ அரசு அனுமதி வழங்க வேண்டுமென்று 12.06.1995 நாளிட்ட அரசு கடித எண்.15611/சி3/94–6ல் அறிவுரைகள் வழங்கப்பட்டுள்ளது. மேலும், 23.11.1998 நாளிட்ட அரசு ஆணை (நிலை) எண்.248–ல் சிலைகள் வைப்பவர்களே பாதுகாப்பு மற்றும் பராமரிப்புப் பொறுப்பை ஏற்றுக் கொள்ள வேண்டும் எனவும் ஆணையிடப்பட்டுள்ளது.

5. இந்நிகழ்வில், நீதிப் பேராணை எண்.1012/2010ன் மீது உயர்நீதிமன்றம் ஆணை வெளியிட்டுள்ளதால், அவ்வாணைக்கிணங்க மேலே பத்தி 4ல் காணும் அறிவுரைகளைத் தளர்த்தி, கடலூர் மாவட்ட ஆட்சித் தலைவரின் பரிந்துரையினை ஏற்று, கடலூர் மாவட்டம், விருத்தாச்சலம் வட்டம், பழையபட்டினம் கிராமம் புல எண். 47 – 0.51.0 ஹெக்டேரில் பாட்டைப் புறம்போக்கு நிலத்தில் முனைவர் பீரா. அம்பேத்கார் அவர்களின் முழு உருவச் சிலையினை மீளவும் அமைத்ததற்கு பின்னேற்பு வழங்கி அரசு ஆணையிடுகிறது.

(ஆளுநரின் ஆணைப்படி)

க. அஷோக் வர்தன் ஷெட்டி,
அரசு முதன்மைச் செயலாளர்.

பெறுநர்
ஆணையாளர்,
ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித்துறை,
சென்னை–15.
மாவட்ட ஆட்சித்தலைவர்,
கடலூர் மாவட்டம்.
மாவட்ட காவல் கண்காணிப்பாளர்,
கடலூர் மாவட்டம்.

<u>நகல்</u>
பொது (சட்டம் மற்றும் ஒழுங்கு) துறை, சென்னை–9.
முதலமைச்சர் அலுவலகம், சென்னை–9.
துணை முதலமைச்சரின் முதுநிலை நேர்முக
உதவியாளர், சென்னை–9.
இருப்புக் கோப்பு/உதிரி.

//ஆணைப்படி அனுப்பப்படுகிறது//

பிரிவு அலுவலர்.